**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC.197/2013 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா.1 |
| Name | : | விஜயலட்சுமி |
| Husband Name: | | சக்திவேல் |
| Village | : | அய்யனாத்தூர், |
| Taluk | : | அரியலூர் |
| Age | : | 35/ 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day07.01.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**(எதிரி 1–இளங்கோவன், 2–சரவணன் – ஆஜர்)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியான நான் திருமணம் செய்து சென்ற எனது கணவர் வீட்டில் வசித்து வருகிறேன். நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 13.04.2005ம் தேதி நான் எனது தந்தை வீட்டில் திருமணம் ஆவதற்கு முன்பு இருந்போது, மேற்படி தேதியில் 11ம் வகுப்பு படித்துக்கொண்டும் தேர்வு எழுதுவதற்காக நாட்டார் மங்களத்திலிருந்து செட்டிக்குளம் சென்றபோது, எனது பள்ளி கேட்டின் முன்பு வைத்து கட்ட புள்ள, கருக மணி போட்ட புள்ள, குட்ட புள்ள, முன்னயும் பின்னயும் இரண்டு ஆடுது என என்னை அவமானப்படுத்தி எதிரிகள் இளங்கோவனும், சரவணனும் பேசி என்னை மன உளைச்சலுக்கு ஆளாக்கினார்கள். நான் இது சம்பந்தமாக எதிரிகள் என்னை வழிமறித்து மேற்படி என்னை பேசியதை எனது தந்தையிடம் சொன்னேன். சம்பவம் நடந்தபோது, தமிழ்இலக்கியா, ராஜேஷ்வரி ஆகியோர் அருகில் இருந்தனர். எனது தந்தை மூலம் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்து காவல் ஆய்வாளர் வந்து

விசாரித்தார். நான் எனது தேர்வை முடித்து விட்டு எனது தந்தையுடன் காவல் நிலையம் சென்று இது தொடர்பாக புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் நான் கொடுத்த புகார்தான் அதில் உள்ள கையொப்பமும் என்னுடையதுதான். **(புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i) எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய போதுமான வாய்ப்பளிக்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை இல்லை.

**மறு விசாரணை :** இல்லை

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-
District Munsif Cum Judicial Magistrate,
Veppanthattai,
(FAC) Additional Mahila Court,
Perambalur.